தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வேளாண் பொருள் உற்பத்தி: விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும்

**சென்னை,**




- நபார்டு வங்கியின் செயல் திட்டம் குறித்த விளக்கப் புத்தகத்தை வெளியிட்ட நிதித் துறை செயலாளர் க.சண்முகம் (நடுவில்). உடன், (இடமிருந்து) நபார்டு வங்கி தலைமை பொது மேலாளர் லலிதா வெங்கடேசன், ரிசர்வ் வங்கி சென்னை கிளையின் பொது மேலாளர் எஸ்.ராஜா.

வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு வேளாண் பொருள் உற்பத்தியில் ஈடுபட விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் தமிழக நிதித் துறை செயலர் க.சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு) சார்பில் வரும் நிதியாண்டில் (2014-15) கடன் வழங்குவதற்கான இலக்கு உள்ளிட்ட செயல்

திட்டங்களை விளக்குவதற்கான கருத்தரங்கம் சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில், தலைமை விருந்தினராக பங்கேற்று சண்முகம் பேசியது:

வேளாண் துறையில் குறைந்தபட்சம் 4 சதவீத வளர்ச்சியை எட்ட வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துச் செயல்படுகிறோம். ஆனால், அந்த இலக்கை நம்மால் எட்ட முடியாத நிலை உள்ளது.

மீண்டும் கிராமம் நோக்கி...:கிராமங்களில் விவசாயம் உள்ளிட்ட தொழில்களைச் செய்து வருமானம் ஈட்டுவோருக்கும், நகர்ப்புறங்களில் வருமானம் பெறுவோருக்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. இதனால், நல்ல வேலைவாய்ப்புகளுக்காக கிராமப்புறங்களில் இருந்து பெரும்பாலான மக்கள் நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்கின்றனர்.

அதேசமயம், நகரங்களில் உள்ள மிகப்பெரிய தொழிற்சாலைகள் கூட இப்போதைய நிதிச் சுமையால் வேலைவாய்ப்புகளைக் குறைத்து வருகின்றன. இதனால், நகர்ப்புறங்களில் இருந்து கிராமப்புறங்களுக்கே திரும்பச் செல்ல மக்கள் விரும்புவதாக செய்திகள் வெளியாகின்றன.

கிராமப்புறங்கள் மேம்பாடு அடைய வேண்டுமென்றால் மூன்று முக்கிய காரணிகள் சிறப்பாக இருக்க வேண்டும். வேளாண்மை, வேளாண் சார்ந்த உற்பத்தி தொழிற்சாலைகள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள்.

விளை பொருள்களுக்கு கிராக்கி: கரும்பு, பருத்தி போன்றவற்றுக்கு தமிழகத்தில் மிகப்பெரிய அளவில் தேவைகள் இருக்கின்றன. ஆனால், இந்தத் தேவையை நமது மாநிலத்துக்குள்ளேயே பூர்த்தி செய்ய முடியவில்லை. உதாரணத்துக்கு, இங்குள்ள நூற்பு ஆலைகளுக்கு தேவையான பருத்தியின் அளவு நாட்டிலுள்ள மொத்தத் தேவை அளவில் 60 சதவீதமாகும். இதனால், ஆந்திரம், குஜராத் போன்ற பிற மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

தென் மாவட்டங்களில் விருதுநகர் போன்ற இடங்களில் பருத்தி அதிகளவு பயிரிடப்பட்டது. ஆனால், இப்போது பருத்தி உற்பத்தி பெரும்பாலான இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடர வேண்டும்.

கால்நடை வளர்ப்பு:இலவச ஆடு, மாடுகள் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையில், கோழி வளர்ப்புத் திட்டத்தை கிராமப்புற மக்கள் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, மலைவாழ் மக்கள் கோழி பண்ணைத் தொழிலில் ஈடுபட்டால் அதிக லாபம் ஈட்டுவதுடன் அவர்களது உணவுத் தேவைக்காகவும் பயன்படும்.

இந்தத் தகவல்களை வங்கிகளில் உள்ள அதிகாரிகள், கிராமப்புற மக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றார் சண்முகம்.

இந்த நிகழ்ச்சியில், நபார்டு வங்கியின் தலைமை பொது மேலாளர் லலிதா வெங்கடேசன், சென்னையில் உள்ள ரிசர்வ் வங்கியின் பொது மேலாளர் எஸ்.ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**"சுயஉதவிக் குழு தயாரிப்புகளை விற்க புதிய உத்தி தேவை'**

சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை விற்பதற்கு புதிய உத்தியை உருவாக்க வேண்டும் என்று சண்முகம் கூறினார்.

நபார்டு நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியது: சுயஉதவிக் குழுக்கள் பல நுண்ணிய, கலை வண்ணமிக்க பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் சமூகத்தில் ஒரு குழுவாக இணைந்துச் செயல்படுகிறார்கள். அதேசமயம், அந்தப் பொருட்களை விற்பனை செய்வதற்கான ஒரு திறமையான கூட்டுச் செயல்முறையை உருவாக்க வேண்டும் என்றார்.

**விதை விற்பனை நிலையங்களில் அதிகாரிகள் சோதனை**

**காஞ்சிபுரம்,**

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தனியார் மற்றும் அரசு விதை விற்பனை நிலையங்களில் தரமான விதை விற்பனை செய்யப்படுகிறதா? என்பது குறித்து அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

சென்னை விதை ஆய்வு துணை இயக்குநர் தலைமையில் காஞ்சிபுரம் மற்றும் சென்னை விதை ஆய்வாளர்கள் காட்டாங்கொளத்தூர் பகுதிகளிலுள்ள 23 தனியார் மற்றும் 4 அரசு விதை விற்பனை நிலையங்களில் சோதனை நடத்தினர்.

அப்போது முளைப்புத் திறன், புறதூய்மை சரியாக உள்ளதா? என சோதனை நடத்தினர்.

நெல் மற்றும் காய்கறி விதைகளில் விதை மாதிரி எடுத்து காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை மையத்துக்கு அனுப்பி வைத்தனர்.

முறையாக விதைகள் விற்கப்படுகிறதா?, மற்ற மாநிலங்களில் இருந்து வரும் விதைகளுக்கு விதைச் சான்று உள்ளதா? விவர அட்டை விலை குறிப்பிடப்பட்டுள்ளதா? விதை இருப்புப் பட்டியல் பண்ணையில் வைக்கப்பட்டுள்ளதா? எனவும் சோதனை செய்தனர்.

இது குறித்த அறிக்கை மாவட்ட நிர்வாகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. காலாவதி விதைகளை விற்பனை செய்யும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சவுக்கு மர உற்பத்தியில் இந்தியா முதலிடம் மத்திய வனத்துறைச் செயலர் தகவல் செங்கல்பட்டு,**

உலக அளவில் சவுக்கு மர உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிப்பதாக இந்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைச் செயலர் டாக்டர் ராஜகோபாலன் தெரிவித்தார். கோவை வன மரபியல் மற்றும் வனப் பெருக்கு நிறுவனம் சார்பில் 4 நாள்கள் நடைபெறும் 5-வது சர்வதேச சவுக்கு மர கருத்தரங்கம் மாமல்லபுரத்தில் உள்ள தனியார் நட்சத்திர ஹோட்டலில் திங்கள்கிழமை தொடங்கியது.

கருத்தரங்கை தொடங்கி வைத்தும், விழா மலரை வெளியிட்டும், அவர் பேசியது:

சவுக்கு மர பயிலரங்கம் இதற்கு முன் சீனா, வியத்நாம், எகிப்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் நடந்துள்ளது. இந்தியாவில் 6 ஆயிரம் கி.மீ. கடலோரப் பரப்பு உள்ளது. இந்த கடலோரப் பகுதிகளை சவுக்கு மரங்கள்தான் புயல், மண் அரிப்பு இவற்றிலிருந்து காத்து வருகின்றன. உலகளவில் மக்கள்தொகையில் நமது நாடு இரண்டாம் இடத்தில் உள்ளதால் நமக்கு அதிக அளவில் விறகு, வீடு கட்ட, பேப்பர் தயாரிக்க மரங்கள் தேவைப்படுகின்றன.

நமது தேசிய அளவிலான கொள்கைபடி, காட்டுக்கு அப்பால் உள்ள மரங்கள் மட்டுமே உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது. விவசாய உற்பத்திக்கு பாதிக்காதவண்ணம் மரங்களை வளர்ப்பதில் நமது அரசு கவனமாக உள்ளது.

சவுக்கு மர உற்பத்தியில் உலக அளவில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. சவுக்குமரம் எரிபொருளாகவும், ஊரகப் பகுதிகளில் வீடு கட்ட கட்டுமானப் பொருளாகவும, பேப்பர் தயாரிக்க உதவும் கூழ் மரமாகவும் உதவுகிறது. சவுக்கு மரம், காற்று மற்றும் களர் மண்ணிலிருந்து பயிர்களைக் காப்பாற்றி வருகிறது. சவுக்கு உற்பத்தியாவது ஊரகப் பகுதிகளிலும், கிராமங்களிலும் பல வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது என்றார் அவர்.

வன மரபியல் மற்றும் வனப் பெருக்கு நிறுவன இயக்குநர் டாக்டர் கிருஷ்ணகுமார் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தாய்லாந்து, சீனா, ஜெனகல், பிலிப்பைன்ஸ், மாலி, பிரான்ஸ், பங்களாதேஷ் உள்பட 11 நாடுகளைச் சேர்ந்த சவுக்குமர ஆராய்ச்சியாளர்களும், இந்திய ஆராய்ச்சியாளர்களும் கலந்து கொண்டனர்.

தொடக்க நாள் நிகழ்ச்சியில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை கூடுதல் இயக்குநர் ஏ.கே.ஸ்ரீவத்சலா, தேசிய பல்லுயிர் பரவல் ஆணைய தலைவர் டாக்டர் பாலகிருஷ்ண பசுபதி, சவுக்கு மர ஆராய்ச்சியாளர்கள் கோங்சாங் பின்யுசாரக் (ஆஸ்திரேலியா), ஆண்டனி காலிங் சுரே (மாலி) உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஆடு வழங்கும் திட்டத்தால் ஏழைகளின் வாழ்க்கைத் தரம் உயர்வு: அமைச்சர் பேச்சு**

**கும்மிடிப்பூண்டி,**

தமிழக அரசின் ஆடு வழங்கும் திட்டத்தால் ஏழைகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருவதாக தமிழக வருவாய்த்துறை அமைச்சர் பி.வி.ரமணா தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டியை அடுத்த பெரியபாளையத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு, ஒன்றியக்குழுத் தலைவர் அம்மினி மகேந்திரன் தலைமை வகித்தார்.

துணைத்தலைவர் பாபு, பெரியபாளையம் கால்நடை மருத்துவர் ஜாகிர் அப்பாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் ஊராட்சித் தலைவர் ராஜா வரவேற்றார்.

விழாவில், மாவட்ட ஊராட்சித் தலைவர் பி.ரவிச்சந்திரன், எம்.எல்.ஏ.க்கள் இரா.மணிமாறன், பொன்.ராஜா ஆகியோர் பேசினர்.

விழாவில், சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தமிழக வருவாய்த்துறை அமைச்சர் பி.வி.ரமணா, 107 பயனாளிகளுக்கு தலா ரூ. 12,150 மதிப்புள்ள 4 ஆடுகளை வழங்கி பேசியது:

தமிழக அரசின் இந்த திட்டத்தில் ஏழைப் பெண்கள், விதவைகள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர். மேலும் ஏழைகளின் பொருளாதார நிலையும் மேம்பாடு அடைகிறது.

இந்த திட்டத்தில் 8 லட்சம் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அதிமுக ஆட்சியில் கடந்த 2 ஆண்டுகளில் 3.20 லட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 1.60 லட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் வழங்க திட்டமிட்டு வழங்கப்பட்டு வருகின்றன என்றார் அவர்.விழாவில் ஒன்றிய கவுன்சிலர் சுரேஷ், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் கேசவன் உள்ளிட்டோர் கலந்து

கொண்டனர்.

**ஜெகநாதபுரம் கிராமத்தில் பண்ணைப் பள்ளி பயிற்சி முகாம்**

**பொன்னேரி,**

சோழவரம் அருகே உள்ள ஜெகநாதபுரம் கிராமத்தில் வேளாண்மைத்துறை சார்பில் பண்ணைப்பள்ளி பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அட்மா திட்டத்தின் கீழ் நடைபெற்ற இம்முகாமுக்கு மாவட்ட வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் ராகவேந்திரராவ் தலைமை வகித்தார்.

சோழவரம் ஒன்றிய வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் திலகவதி, மணிலா சாகுபடி மற்றும் சிறு தானியங்கள் உற்பத்தி குறித்து விளக்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக ஜெகநாதபுரம் ஊராட்சித் தலைவர் சம்பத் பங்கேற்று பேசினார். முகாமில் களைக்கொல்லி முறை குறித்து அட்மா திட்ட துணை இயக்குநர் ல்டான்லி விளக்கிப் பேசினார். முகாமில் 75 விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள் வழங்கப்பட்டன. மேலும் மணிலா விதைகள் 50 சதவீத மானியத்துடன் 50 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. முகாமின் இறுதியில் டி.ஏ.பி. மருந்து தெளித்தல் முறை குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் மூலம் காண்பிக்கப்பட்டது.

**சொட்டு நீர்ப்பாசனத்துக்கு அரசு மானியம்**

**கமுதி,**

வறட்சியிலும் வளம் காணும் வகையில் சொட்டு நீர்ப்பாசனத்துக்கு, தமிழக முதல்வர் உத்தரவில் அரசு மானிய உதவிகள் கமுதி வட்டார விவசாயிகளுக்கு வழங்கப்படுகி ன்றன.

கமுதி வட்டார தோட்டக்கலை வேளாண் உதவி இயக்குனர் எஸ்.ஆறுமுகம், செவ்வாய்க்கிழமை இது குறித்து மேலும் தெரிவித்தது: கமுதி வட்டாரத்தில் குறைவான நீரைப் பயன்படுத்தி, பயிர் சாகுபடி செய்ய, சொட்டு நீர்ப்பாசனம் பெரிய வரப்பிரசாதமாக அமைகிறது. சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்துடனும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்துடனும்

சொட்டு நீர்ப்பாசன வசதிகள் செய்து தரும்படி தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இதன்படி மிளகாய், காய்கறிகள், பழக்தன்றுகள், பூச்செடிகள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு, தோட்டக்கலை வேளாண் இணை இயக்குநர் மேற்பார்வையில் சொட்டு நீர்ப்பாசன வசதி செய்து தரப்பட்டு வருகிறது. எனவே கமுதி வட்டார சிறு, மிகச்சிறு விவசாயிகள், மற்ற விவசாயிகள் ஆகியோர், தோட்டக்கலைத் துறையினரை அணுகி, சொட்டு நீர்ப்பாசன மானிய உதவிகளைப் பெற்று பயன் அடையும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்றார்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலை.யில் விவசாயிகளின் வாரிசுகளுக்கு இடஒதுக்கீடு முறை மீண்டும் அமலுக்கு வருமா?

**கோவை**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அமலில் இருந்து உச்ச நீதிமன்ற உத்தரவால் நிறுத்திவைக்கப்பட்ட, விவசாயிகளின் வாரிசுகளுக்கான இட ஒதுக்கீடு முறையை மீண்டும் அமல்படுத்த அரசு பரிசீலித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் மாநிலம் முழுவதும் உள்ள 8 வளாகங்களில் 11 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. 13 இளநிலை படிப்புகளும், 40 முதுநிலைப் படிப்புகளும், 26 ஆய்வுப் படிப்புகளையும் வழங்கி வருகிறது.

2013-14 கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையில், அரசுக் கல்லூரிகளில் 10 சதவீத இடங்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளன. அதன்படி, உறுப்புக் கல்லூரிகள், இணைப்புக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களின் எண்ணிக்கை 1330. இதுதவிர சுயநிதிப் பிரிவின் கீழ் தனியார் கல்லூரிகளில் 290 இடங்களில் மாணவ, மாணவிகள் சேரலாம்.

விவசாயிகளின் வாரிசுகளுக்கு இடஒதுக்கீடு: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், விவசாயிகளின் குழந்தைகளுக்கு இடஒதுக்கீடு முறை

பின்பற்றப்பட்டு வந்தது. இந்த முறை 2007-08 வரை நடைமுறையில் இருந்தது. இந் நிலையில் விளையாட்டு, முன்னாள் ராணுவ வீரர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்பேரில், இந்த மூன்று பிரிவுகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு முறை அமலுக்கு வந்தது. விவசாயிகளின் வாரிசுகளுக்கான இடஒதுக்கீடு முறை நிறுத்தப்பட்டது.

2007-08இல் மட்டும் விவசாயிகளின் வாரிசுகள் 65 பேர் பி.எஸ்சி. வேளாண்மை, தோட்டக்கலைப் படிப்புகளில் சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது, கிராமப்புறங்களில் விவசாயம் செய்வோரின் எண்ணிக்கை குறைந்துவரும் நிலையில், இளைஞர்கள் அதிகளவில் விவசாயத்துக்கு வர வேண்டும் என ஆட்சியாளர்களும், விஞ்ஞானிகளும் அறைகூவல் விடுத்து வருகின்றனர்.

ஊரகப் பகுதி மற்றும் நகரப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் வேளாண் துறையின் பல்வேறு படிப்புகளில் சேர்ந்து வருகின்றனர். குறிப்பாக, நகரப் பகுதிகளைச் சேர்ந்த அதிகமான மாணவர்கள் வேளாண்மைப் படிப்புகளைப் படித்து வருகின்றனர். ஆனால், அவர்களுக்கு விவசாய நிலங்களில் செயல்விளக்கம் செய்ய போதிய வாய்ப்புகள் இல்லாமல் போகின்றது.

அதேநேரத்தில், விவசாயிகளின் வாரிசுகள் வேளாண் படிப்புகளைப் படிக்கும்போது அவர்கள் தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபட வாய்ப்பு ஏற்படுகிறது எனப் பேராசிரியர்கள், வல்லுநர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் இரண்டாவது வேளாண்மைப் புரட்சிக்கு அரசு அழைப்பு விடுத்துள்ளது. அதேநேரத்தில், வேளாண்மைத் துறையில் பல்வேறு நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இச் சமயத்தில், விவசாயிகளின் வாரிசுகளுக்கு மீண்டும் இடஒதுக்கீடு முறை அமல்படுத்தப்பட வேண்டும் என்பது பெரும்பாலான விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

அரசுக்குப் பரிந்துரை: இதனிடையே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், மாநில திட்டக் குழு உறுப்பினருமான (வேளாண்மை) கு.ராமசாமி, விவசாயிகளின் வாரிசுகளுக்கு இடஒதுக்கீட்டு முறையை மீண்டும் கொண்டு வரலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். இப் பரிந்துரையை ஏற்று அரசும் பரிசீலித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2014-15 கல்வியாண்டில், 5 ஆண்டுகளாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த விவசாயிகளின் வாரிசுகளுக்கு இடஒதுக்கீடு முறை மீண்டும் அமலுக்கு வரும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது.

**சுல்தான்பேட்டையில் மானிய விலை வைக்கோல் மையம் திறப்பு**

**பல்லடம்,**

கோவை மாவட்டம், சுல்தான்பேட்டை கால்நடை மருத்துவமனையில் மானிய விலையில் வைக்கோல் வழங்கும் திட்டம் செவ்வாய்க்கிழமை துவங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு, கோவை மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மருத்துவர் வி.முத்துகோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். துணை இயக்குநர் மருத்துவர் எஸ்.சுந்தரராஜன், உதவி இயக்குநர் மருத்துவர் எஸ்.பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவை மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.கனகராஜ் வைக்கோல் விநியோகம் செய்யும் பணியை துவக்கி வைத்தார்(படம்).

கோவை கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குனர் மருத்துவர் வி.முத்துகோபாலகிருஷ்ணன் கூறியது:

ஒரு கிலோ வைக்கோல் ரூ. 2 என்ற மானிய விலையில் ஒரு மாட்டிற்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 மாடுகளுக்கு வாராந்திரத் தேவையின் அடிப்படையில் வாரம் ஒரு முறை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் சூலூர், சுல்தான்பேட்டை, மதுக்கரை, கிணத்துக்கடவு ஆகிய

இடங்களில் உள்ள அரசு கால்நடை நிலையங்களில் உலர் தீவன மையம் அமைக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யும் விவசாயிகளுக்கு கால்நடை தீவனம் வழங்கும் அட்டை வழங்கப்படும். இந்த அட்டை வைத்திருந்தால் மட்டுமே இத் திட்டத்தில் பயன்பெற முடியும் என்றார்.

இந் நிகழ்ச்சியில், வாரப்பட்டி ஊராட்சித் தலைவர் டி.சக்திவேல், கூட்டுறவு சங்கத் தலைவர்கள் வதம்பச்சேரி பி.கந்தசாமி, தாளக்கரை பி.சக்தி, கால்நடை மருத்துவர் எஸ்.சுப்பிரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர்.

**உரம் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும்: விவசாயிகள் கோரிக்கை**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை நகர உரக்கடைகளில் கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பதைத் தடுக்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருவண்ணாமலை தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. திருவண்ணாமலை தாலுகா அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் காமராஜ் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள், திருவண்ணாமலை நகரில் இருந்து இயக்கப்படும் டவுன் பஸ்களில் குறைந்தபட்ச கட்டணமான ரூ.3 கொடுப்பதில்லை. மாறாக, ரூ.4 டிக்கெட் தருகின்றனர். இதைத் தடுக்க வேண்டும். திருவண்ணாமலை நகரில் உள்ள உரக் கடைகளில் கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு உரக் கடையிலும் வெவ்வேறு விலையில் உரம் விற்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று வட்டாட்சியர் காமராஜ் தெரிவித்தார்.

**"இஸ்ரேல் தொழில்நுட்பத்துடன் ரோஜா மலர் சாகுபடித் திட்டம்'**
**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இஸ்ரேல் தொழில் நுட்பத்துடன் தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை சார்பில் ரோஜா மலர் சாகுபடி செய்யத் திட்டம் உள்ளதாக மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட தொழில் மையம் சார்பில், கிருஷ்ணகிரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்கான கருத்தரங்கை மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் குத்துவிளக்கேற்றி தொடக்கிவைத்துப் பேசியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்க திட்டம், பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், புதிய தொழில்முனைவோர், தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் என மூன்று திட்டங்கள் மிகச் சிறப்பாக செயல்படுகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொழில் முனைவோர் தொழில் தொடங்க சிறந்த உள் கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் ஏழை, பணக்காரர் ஆகியோருக்கு இடையே உள்ள இடைவெளி குறைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் முதல் தலைமுறையாகத் தொழில் தொடங்குபவர்களுக்கு ரூ.1.கோடி மதிப்பில் 25 சத மானியத்தில் கடன் வழங்கப்படுகிறது.

தமிழகத்தில், தொழில் முனைவோர் தொழில் தொடங்க கடன் வழங்குவதில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. இதுவரை 2013-2014 ஆம் ஆண்டில் 191 பயனாளிகளுக்கு ரூ.3.80 கோடி மதிப்பிலான கடன்கள்

வழங்கப்பட்டுள்ளன. மேலும், தொழில் தொடங்க கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

இஸ்ரேல் தொழில் நுட்பத்துடன் தமிழ்நாடு தோட்டக்கலை துறையின் மூலம் ரோஜா மலர்கள் சாகுபடி செய்யும் திட்டத்தை தமிழக முதல்வர் தொடங்க உள்ளார். இது போன்றத் திட்டங்களால் வரும் காலத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் மேலும் வளர்ச்சி பெறும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 60 ஆயிரம் சிறு, குறு தொழில்சாலைகள் மூலம் ரூ.60 ஆயிரம் கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளன. இது வளர்ச்சிக்கான நல்ல அறிகுறியாகும். வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் இந்த வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தி வாழ்கையில் முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளுடன் சிறந்த தொழில் முனைவோராக வேண்டும் என்றார் அவர்.

**வேளாண் இயந்திரமயமாக்கல் பயிற்சி**

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் ஊரக வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், விவசாயிகளுக்கு விவசாயப்பணிகளில் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் பிப்.10 முதல் 15-ம் தேதி வரை ஒரு வாரகாலப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

புன்செய் நில விவசாயத்திற்கான வேளாண்கருவிகள், நவீன வேளாண் கருவிகள் பராமரிப்பு, பழுது நீக்கம், நெல் சாகுபடி மற்றும் கரும்பு சாகுபடிக்குத் தேவையான வேளாண் கருவிகளின் தொகுப்பு ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பிற துறை அலுவலர்கள் மூலமும் பயிற்சி வகுப்பு அளிக்கப்படும். மேலும், உள்ளூர் பட்டறிவுப் பயணமாகவும் அழைத்துச் செல்லப்படுவர். பயிற்சி முடித்த விவசாயிகளுக்கு துறையின் மூலம் சான்று வழங்கப்படும். புதுக்கோட்டை அலுவலகத்தில் 2 பயிற்சிகளும், அறந்தாங்கி அலுவலகத்தில் 2 பயிற்சிகளும்

நடைபெற உள்ளன.  ஒரு பயிற்சிக்கு தலா 20 விவசாயிகள் (40 வயதுக்கு மிகாதவர்கள்) வீதம் 2 பயிற்சிகள் அளிக்கப்படும். பயிற்சியின்போது உதவித்தொகை வழங்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் விராலிமலை, அன்னவாசல், குன்றாண்டார்கோவில், புதுக்கோட்டை, திருவரங்குளம், கந்தர்வக்கோட்டை மற்றும் கறம்பக்குடி ஆகிய ஒன்றியப் பகுதிகளைச் சார்ந்த விவசாயிகள், புதுக்கோட்டை, திருச்சி சாலையில் நெடுஞ்சாலைத்துறை அலுவலகம் அருகே உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும், பொன்னமராவதி, திருமயம், அரிமளம், அறந்தாங்கி, மணமேல்குடி, ஆவுடையார்கோவில் ஆகிய ஒன்றியப் பகுதிகளைச் சார்ந்த விவசாயிகள் அறந்தாங்கி அக்ரஹாரம் ரங்கோஜபாவா தெருவில் உள்ள உதவி செயற் பொறியாளர் அலுவலகத்திலும் பதிவு செய்யலாம்.

மேலும் விவரங்களுக்கு புதுக்கோட்டை வருவாய் கோட்ட விவசாயிகள் 94434 56682 என்ற எண்ணிலும், அறந்தாங்கி வருவாய் கோட்ட விவசாயிகள் 94434 48667 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

**உம்பளச்சேரியில் பாரம்பரிய கால்நடைகள் கண்காட்சி**

**நாகப்பட்டினம்,**

உம்பளச்சேரி பாரம்பரிய இன கால்நடைகளைப் பாதுகாக்கவும், இந்தக் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்குவிக்கவும் பிப். 7,8 தேதிகளில், நாகை மாவட்டம், உம்பளச்சேரியில் அரசு சார்பில் கருத்தரங்கம், கண்காட்சி, பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்துள்ளது:

உம்பளச்சேரியில் பிப். 7-ம் தேதி பாரம்பரிய இன கால்நடை வளர்ப்பு குறித்த பயிலரங்கமும், பிப். 8-ம் தேதி கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக வல்லுநர்களைக் கொண்டு, உம்பளச்சேரி பாரம்பரிய இன கால்நடைகளின் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு பேரணி நடைபெறவுள்ளது.

இதில், சிறந்த கால்நடைகள் தேர்வு செய்யப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும். முதல் பரிசாக ரூ. 10 ஆயிரம், இரண்டாம் பரிசாக 2 கால்நடைகளுக்கு தலா ரூ. 3 ஆயிரம், மூன்றாம் பரிசாக 4 கால்நடைகளுக்கு தலா ரூ. 2 ஆயிரம் பரிசு வழங்கப்படும். மேலும், ஆறுதல் பரிசாக 6 கால்நடைகளுக்கு தலா ரூ. 1,000 வழங்கப்படும்.

எனவே, தங்கள் பராமரிப்பில் உள்ள உம்பளச்சேரி பாரம்பரிய இன கால்நடைகளை கண்காட்சியில் பங்கேற்கச் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும்.

## இரண்டரை மடங்கு மகசூல் தரும் நவீன கரும்பு சாகுபடி

**விழுப்புரம்,**

நீடித்த நிலையான கரும்பு சாகுபடி (எஸ்.எஸ்.ஐ) எனப்படும் நவீன தொழில் நுட்பத்தின் மூலம் கரும்பு சாகுபடி செய்தால் அதன் மூலம் இரண்டரை மடங்கு கரும்பு மகசூல் எடுக்க முடியும் என்று விவசாயத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கரும்பு மிக முக்கியமான பணப்பயிர். விழுப்புரம் மாவட்டத்தில் 7 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவை மட்டும் இல்லாமல் வெளிமாவட்டத்தில் உள்ள 6 சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு அனுப்பப்படுகிறது. கரும்புக்கான தேவை அதிகம் இருப்பதால் இம் மாவட்டத்தில் 1,20,000 ஹெக்டரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது.

தற்போது கரும்புக்கான தேவை அதிகமாக உள்ளது. சாதரண முறையில் நடவு செய்வதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 30 முதல் 40 டன் வரை மட்டுமே கரும்பு கிடைக்கிறது. ஆனால் இந்த கரும்பை எஸ்.எஸ்.ஐ முறையில் நடவு செய்வதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 70 முதல் 80 டன் வரை கரும்பு கிடைக்கும்.

அதேபோல் ஒரு ஏக்கருக்கு கரும்பு பயிர் செய்வதற்கு 30 ஆயிரம் கரணைகள் தேவைப்படும். ஆனால் இம் முறையில் ஏக்கருக்கு 5 ஆயிரம் நாற்றுகள் இருந்தால்

போதுமானது. இம் முறையில் ஒரு நாற்றில் இருந்து 25 கரும்புகள் வரை வரும். சாதரண முறையில் 2-3 அடி இடைவெளியில் நடுவார்கள். இம் முறையில் குறைந்தது 5 அடி இடைவெளியில் நட வேண்டும். சாதரண முறையில் அதிக தண்ணீர் தேவைப்படும். இம் முறையில் குறைந்த அளவு ஈரப்பதம் இருந்தால் போதுமானது. காற்று மற்றும் சூரிய ஒளி புகுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம்.

ஆனால் இந்த நவீன முறையில் கரும்பு சாகுபடி செய்ய சொட்டு நீர் பாசனம் மிகவும் அவசியம். இம் முறையில் சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்துவதன் மூலம் 40 சதவீதம் தண்ணீர் சேமிக்கப்படும். அதே நேரத்தில் சொட்டு நீர் பாசனம் வாயிலாக நீரில் கரையும் உரங்களை கரும்பு பயிருக்கு இடமுடியும் என்றும் விசயாத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து விவசாயத்துறை இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி கூறுகையில் தற்போது விவசாயத்தில் தண்ணீர் பற்றாக்குறையும், ஆள்கள் பற்றாக்குறையும் அதிகமாக உள்ளது. இதுபோன்ற நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தில் பயிர் செய்வதன் மூலம் தண்ணீர் சிக்கனமாக செலவாகிறது. மேலும் நீரில் கரையும் உரங்களை சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீரில் கலந்து இடுவதால் ஆள்களுக்கான தேவை குறைவு.

அரசு சொட்டு நீர் பாசனம் அமைக்க சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் அளிக்கிறது. பெரு விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் அளிக்கப்படுகிறது. இதேபோல் ஹெக்டர் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரம் மதிப்புள்ள நீரில் கரையும் உரங்களும் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தை செயல்படுத்துவதில் விழுப்புரம் மாவட்டம் முன்னோடி மாவட்டமாக உள்ளது. இந்த நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தில் ஊடு பயிராகவும் வேறு சில பயிர்களை பயிரிட முடியும். இதனால் கரும்பு மகசூல் பாதிக்காது. விவசாயிகள் கூடுதல் லாபம் பெறலாம் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

### ஆப்ரிக்காவில் விவசாயம்: அழைக்கிறார் சரத் பவார்

**புதுடில்லி**: "ஆப்ரிக்க நாடுகளில், விவசாய விளை நிலங்கள் அதிகம் உள்ளன. இந்தியா உட்பட ஆசிய நாடுகள், ஆப்ரிக்க நாடுகளில் விவசாய துறையில் முதலீடு செய்ய வேண்டும்," என, மத்திய விவசாய அமைச்சர், சரத் பவார் கூறினார். டில்லியில் நேற்று நடந்த கருத்தரங்கம் ஒன்றில், அமைச்சர் சரத் பவார் கூறியதாவது: ஆசிய, நாடுகளில் விவசாய நிலங்களுக்கு கடும் நெருக்கடி உள்ளது. மக்கள்தொகை அதிகரிப்பு, நகரமயமாக்கலால், விவசாய நிலங்கள் குறைந்து வருகின்றன. இதனால், ஆசிய நாடுகள், ஆப்ரிக்காவில் விவசாயத்தில் முதலீடு செய்யும் வாய்ப்பு அதிகரித்து உள்ளது. ஆப்ரிக்காவில் விவசாயத்தில் செய்யப்படும் முதலீடு, விவசாய வளர்ச்சிக்கு வழி வகுக்கும். மேலும், ஆசிய நாடுகளின் உணவு உற்பத்தி அதிகரிக்கும். இவ்வாறு, அவர் கூறினார்.

### நெல் கொள்முதல் நிலையம் 7 இடங்களில் திறப்பு

**கரூர்**: கரூர் மாவட்டத்தில், ஏழு இடங்களில், நெல் கொள்முதல் நிலையம் நேற்று திறக்கப்பட்டது.கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:கரூர் மாவட்டம் குளித்தலை தாலுகாவில் நங்கவரம், நச்சலூர், கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் கோவக்குளம், பஞ்சப்பட்டி, கரூர் தாலுகாவில் மொச்சகொட்டாம்பாளையம், ஆண்டாங்கோவில்மேற்கு, அரவக்குறிச்சி

தாலுகாவில் சின்னதாராபுரம் சமுதாயக்கூடம் ஆகிய ஏழு இடங்களில், 2013-14ம் ஆண்டுக்கான காரீஃப் பருவத்தில் விளைந்துள்ள நெல்லை கொள்முதல் செய்ய, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் நேரடி கொள்முதல் நிலையம் நேற்று முதல் திறக்கப்பட்டுள்ளது.அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத் தொகையும் சேர்த்து நெல் கிரேடு, "ஏ' ரகத்துக்கு குவிண்டால் ஒன்றுக்கு, 1,415 ரூபாயும், பொதுரக நெல்லுக்கு, 1,360 ரூபாயும் வழங்கப்படும். நெல் கொள்முல் செய்யும் இடத்தில், 17 சதவீதம் ஈரப்பதத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ள திரிபுகளுக்கு மிகாமல் உள்ள நெல் கொள்முதல் செய்யப்படும்.எனவே, இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி அறுவடை செய்ய நெல்லை நேரடியாக கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன் பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**நாட்டுக்கோழி வளர்ப்புக்கு மானியம்: கலெக்டர் தகவல்**

**கரூர்**: "நாட்டுக் மற்றும் கறிக்கோழி வளர்ப்பிற்கு மானியம் வழங்கப்படுகிறது' என, கரூர் கலெக்டர் ஜெயந்தி கூறினார்.கரூர் மாவட்டம், பண்டுகாரன்புதூர் கால்நடைபல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம், பயனாளிகளுக்கு பண்ணை முறையில் நாட்டுக்கோழி, கறிக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. இதில் கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்து பேசியதாவது:கோழி வளர்ப்பு மேம்பாட்டுத்திட்டம் மூலம் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. அதன்பின் வங்கியின் மூலம், 50 சதவீத மானியத்துடன் கடன் உதவி வழங்கப்படுகிறது. கரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம், 2012-13ம் ஆண்டில், 35 பயனாளிகளுக்கு, 50 சதவீத மானியத்தில், 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தில் முதல்கட்டமாக, 83 லட்சம் ரூபாய், இரண்டாம் கட்டமாக, 20 லட்சம் ரூபாய் என, மொத்தம், ஒரு கோடி, 3 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மானியம் பெற்ற, 126

பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி வழங்கப்படுகிறது.இந்த பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்புத் தொழிலுக்கு, 250 கோழிகள் 1.17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கும்போது, அரசின் மற்றும் நபார்டு வங்கி மானியம், 58 ஆயிரத்து, 500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.இதேபோல கறிக்கோழி வளர்ப்பிற்கு ஆயிரம் குஞ்சுகளுக்கு, 41 ஆயிரத்து, 250 ரூபாய், மூன்றாயிரத்துக்கு, 1.23 லட்சம் ரூபாய், 5 ஆயிரம் குஞ்சுக்கு, 2.06 லட்சம் ரூபாய் என, அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அதே அளவு மானியமாக நபார்டு வங்கி மூலமும் வழங்கப்படுகிறது. முதல்கட்டமாக, 35 கறிக்கோழி வளர்ப்பு, 50 நாட்டுக்கோழி வளர்ப்பு பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, தற்போது கோழிப்பண்ணை கட்டிடம் கட்டும்பணி நடக்கிறது. அதைத்தொடர்ந்து புதிய பயனாளிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.மேலும், 6.18 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு மானிய நிதிக்கான உத்தரவை, பயனாளிகளுக்கு கலெக்டர் ஜெயந்தி வழங்கினார். முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் கோபிநாத், ஆராய்ச்சி மைய தலைவர் அகிலா, முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன், நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் பார்த்திபன், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் குழந்தைசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## ஒரு லட்சம் பேர் பயிர் காப்பீடு

**ராமநாதபுரம்:** ராமநாதபுரம் வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது: மாவட்டத்தில் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 250 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மழை, வெள்ளம் மற்றும் வறட்சி காலங்களில் பயிர் பாதிப்பு ஏற்பட்டால் தேசிய பயிர் காப்பீடு திட்டத்தின்படி, ஏக்கருக்கு பிரிமியம் தொகையாக, விவசாய கடன் பெற்ற விவசாயிகள் ரூ.126ம், கடன் பெறாத விவசாயிகள் ரூ.119 செலுத்த வேண்டும்.நடப்பாண்டில், கடன் பெற்ற விவசாயிகள் 14 ஆயிரத்து 179 பேரும், கடன் பெறாத விவசாயிகள் 85 ஆயிரத்து 929 பேரும் பயிர் காப்பீடுக்கு பதிவு செய்துள்ளனர், என்றார்.

## தென்னை விளைச்சல் அதிகரிக்க பயிற்சி

**ராமநாதபுரம்**: ராமநாதபுரம் அருகே பெருங்குளத்தில் வேளாண் துறை சார்பில் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி விளைச்சலை அதிகப்படுத்தும் வகையில் தென்னை விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. தஞ்சை, தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். வேளாண் துறை தரக்கட்டுப்பாடு அதிகாரி ஷேக் அப்துல்லா வரவேற்றார். பெருங்குளம், தாமரைக்குளம் உட்பட சுற்றுவட்டார தென்னை விவசாயிகள் பங்கேற்றனர். தென்னையில் காய் விளைச்சல் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாடு மற்றும் நிவர்த்தி முறைகள், ஒருங்கிணைந்த நீர் நிர்வாகம், பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் மற்றும் ஊடு பயிர்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், தென்னையை தாக்கும் காண்டாமிருகம், கூண்வண்டுகளை ஒழிக்கும் முறை குறித்தும் விளக்கப்பட்டது.வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் துரைசிங், தென்னை விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் செல்லத்துரை அப்துல்லா, செயலாளர் தனிக்கொடி, பெருங்குளம் ஊராட்சி தலைவர் சுகப்பிரியா உட்பட பலர் பங்கேற்றனர். வேளாண் உதவி இயக்குனர் சுப்புராஜ் நன்றி கூறினார்.

## கரும்பு விவசாயிகளுக்கு மானியம் ரூ.30 ஆயிரம் : சாகுபடியை அதிகரிக்க புதிய திட்டம் அறிமுகம்

**காஞ்சிபுரம்** : கரும்பு சாகுபடியை அதிகரிக்க, கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு, 30 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என, வேளாண்மை துறை அறிவித்து உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், நீடித்த கரும்பு மேலாண்மை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

ரூ.63 லட்சம்

இந்த திட்டத்தின் கீழ், 210 ஹெக்டேர் (519 ஏக்கர்) நிலங்களில் கரும்பு பயிர்

செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. மேலும், இந்த திட்டத்திற்காக, 63 லட்சம் ரூபாய் மானிய நிதி வழங்கப்பட்டு உள்ளது.

ஒரு ஹெக்டேர் நிலத்தில் (2.47 ஏக்கர்) கரும்பு பயிரிடும் விவசாயிக்கு, நடவு மற்றும் உயிர் உரங்கள்

பெறுவதற்கு, 30 ஆயிரம் ரூபாய்

மானியமாக வழங்கப்படும்.

விண்ணப்பிக்கலாம்

கரும்பு பயிரிட விரும்பும் விவசாயிகள், தங்களின் நிலப்பரப்பின் வரை படம் மற்றும் சிட்டா, அடங்கல் உள்ளிட்ட சான்றுகளுடன், அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க, மையங்களில் உள்ள வேளாண் உதவி இயக்குனர்களை அணுகலாம்.

இதுகுறித்து, வேளாண் துறை இணை இயக்குனர், சவுந்தர ராஜன் கூறுகையில், "ஒரு கணுவுடன் கூடிய விதைக்கரும்பை, பாலிதீன் பையில் பதியம்போட்டு, 23 நாள் பசுமைக்குடில் நாற்றாங்கால் அமைத்து, பின்னர் வயல்வெளியில் நடவு செய்து, அதிக மகசூல் பெறுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த திட்டத்திற்கு,

ஒரு ஹெக்டேர் நிலத்தில் கரும்பு பயிரிடும் விவசாயிக்கு, 25 ஆயிரம் ரூபாய்க்கு இடுப்பொருட்கள் மானியம் உட்பட, மொத்தம், 30 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்," என்றார்.

## 50 பயனாளிகளுக்கு விலையில்லா மாடுகள்

**வெள்ளேரிதாங்கல்** : வெள்ளேரிதாங்கல் கிராமத்தில் நடந்த விழாவில், 50 பயனாளிகளுக்கு விலையில்லா மாடுகள் வழங்கப்பட்டன.

கடம்பத்துார் ஒன்றியம், வெள்ளேரிதாங்கல் ஊராட்சியில் நடந்த தமிழக அரசின் விலையில்லா மாடுகள் வழங்கும் திட்டத்திற்கான விழாவிற்கு, ஊராட்சி மன்ற தலைவர் ரோஸ்குமார் தலைமை வகித்தார். ஒன்றிய குழு துணைத் தலைவர் சுதாகர் முன்னிலையில், வருவாய்த்துறை அமைச்சர் ரமணா கலந்து கொண்டு, 50

பயனாளிகளுக்கு தலா 30 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 15 லட்சம் ரூபாய் மதிப்பிலான, 50 மாடுகளை வழங்கினார்.

## மஞ்சள் நிறத்தில் சென்டு பூக்கள்

**ஊத்துக்கோட்டை** : எல்லாபுரம் ஒன்றியத்தில், விவசாய நிலங்களில், சென்டு பூக்கள், மஞ்சள் நிறத்தில் பூத்து காணப்படுவது கண்ணுக்கு இதமானதாக உள்ளது. மல்லிகை, ரோஜா, சம்பங்கி உள்ளிட்ட பூக்களில், மாலை செய்து, பூ வியாபாரிகள் விற்கப்படுவது வழக்கம்.

அதில், சென்டு பூ என்ற மஞ்சள் நிறத்தில் உள்ள பூக்களையும் வைத்து தைப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அந்த சென்டு பூக்கள், துலுக்க சாமந்தி என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. இந்த வகை பூக்கள், எல்லாபுரம் ஒன்றியம், பாலவாக்கம், புன்னப்பாக்கம் ஆகிய பகுதிகளில், தற்போது அதிகளவில் பயிரிடப்படுகிறது.

இதுகுறித்து, பாலவாக்கம் பகுதியில் பயிரிடும் விவசாயி ராஜேந்திரன் கூறுகையில், "சென்டு வகை பூக்களின் நாற்றுகள் ஒன்று, மூன்று ரூபாய்க்கு வாங்கி வந்து, பயிரிடப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, 8,000 நாற்றுகள் நடப்படும். ஒரு முறை நாற்று நட்டு, ஐந்து மாதம் பூக்களை அறுவடை செய்யலாம். இதில், 40 நாட்களுக்கு ஒரு முறை பூக்கள் பூக்கும். இந்த வகை பூக்களின் தேவையை கொண்டு வருமானம் கிடைக்கும்," என்றார்.

## வட மாநிலங்களில் குறையும் உற்பத்தி நீலகிரி தேயிலைக்கு கிராக்கி அதிகரிக்குமா?

**ஊட்டி** : 'வட மாநிலங்களில் நிலவும் வறட்சியால் தேயிலை உற்பத்தி குறையத் துவங்கியுள்ளது; இதனால், நீலகிரி தேயிலை துாளுக்கு கிராக்கி அதிகரிக்கும்' என எதிர்பார்க்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் விளையும், தேயிலை துாளுக்கு, தற்போது கிராக்கி அதிகரிக்க துவங்கியுள்ளது. மாவட்டத்தில், கடந்த இரு மாதமாக நிலவும்

பனிப்பொழிவால், மகசூல் குறைந்தாலும், தரம் கூடியுள்ளது. இதனால், உள்நாட்டு வர்த்தகம் களைகட்டியுள்ளது. இந்நிலையில், அசாம், டார்ஜிலிங் உட்பட, வட மாநிலங்களில், பனிப்பொழிவு அதிகரித்து, வறட்சி காரணமாக, தேயிலை மகசூல் குறைந்துள்ளது.

தேயிலை தூாள் உற்பத்தி குறைந்ததால், கோல்கட்டா தேயிலை ஏல மையத்தில், இம்மாதம் நடக்க உள்ள, சில ஏலங்கள் ரத்து செய்யப்படும், என கூறப்படுகிறது. இதனால், வட மாநில வர்த்தகர்களின் கவனம், நீலகிரி தேயிலை தூாளின் மீது திரும்பும் என்பதால், வரும் நாட்களில் நீலகிரி தேயிலைக்கு கிராக்கி அதிகரிக்கும் என, தேயிலை வர்த்தகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## காலாவதியான பூச்சி கொல்லி மருந்து உரக் கடைகளில் ஆய்வு நடத்த முடிவு

**திண்டுக்கல்** காலாவதியான உரங்கள் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளை இருப்பு வைத்திருக்கும் கடை உரிமையாளர்கள் மீது, நடவடிக்கை எடுக்க வேளாண்மைத்துறை முடிவு செய்துள்ளது. விவசாயிகளுக்கு தேவையான அனைத்து ரக உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்தன. இருப்பினும் எதிர்பார்த்த மகசூலை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.அரசு உரிமம் பெற்ற பெரும்பாலான கடைகளில் கலப்பட உரங்கள் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் ஏற்கனவே புகார் தெரிவித்திருந்தனர். வீரியம் இல்லாத பூச்சி கொல்லி மருந்துகள், தரமற்ற இடுபொருட்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் நிவாரணம் கேட்டு மனுக்களை அளிக்கத் துவங்கியுள்ளனர்.வட்டார வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள், களப்பணியாளர்கள் கண்காணிப்பிற்கு பின்பும் இதுபோன்ற அவல நிலை ஏற்பட்டிருப்பது வேளாண்மை துறையினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.இதையடுத்து, அரசு உரிமம் பெற்றுள்ள அனைத்து உரக்கடைகளிலும் தொடர் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட வேளாண்மை துறை அலுவலர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. காலாவதியான பூச்சி கொல்லி மருந்துகள், தரமற்ற உரங்களை இருப்பு

வைத்திருக்கும் உரிமையாளர்களின் உரிமத்தை ரத்து செய்வதோடு, சட்டநடவடிக்கைகளுக்கு உட்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

### மறையூரில், இன்று சந்தன மரம் ஏலம்

**மூணாறு,**: மறையூரில் சந்தன கட்டை ஏலம் இன்று நடக்கிறது.
இடுக்கி மாவட்டம் மூணாறு அருகே உள்ள மறையூரில் 13 சதுர கி.மீ., சுற்றளவில் 55 ஆயிரத்திற்கும் அதிகமான சந்தன மரங்கள் உள்ளன. இயற்கை சீற்றங்களால் முறிந்து விழும் மரங்களும், கடத்தல் காரர்களிடம் இருந்து பறி முதல் செய்யப்படும் சந்தன கட்டைகளும், மறையூரில் உள்ள சந்தன டிப்போவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.
இவை 13 வகையாக பிரிக்கப்பட்டு,ஆண்டுதோறும் ஏலம் விடப்படும். இங்கு இறுதியாக கடந்த மே 22ல் சந்தன கட்டை ஏலம் நடந்தது. அப்போது ஏலத்திற்கு வைக்கப்பட்ட 66.013 டன் சந்தன கட்டைகளில்,41.472 டன் ஏலம் போனது.இதன் மூலம் அரசுக்கு வரி தவிர,ரூ.19.16 கோடி வருமானம் கிடைத்தது. மறையூரில் இன்று (பிப்.,5ம்தேதி) சந்தன கட்டை ஏலம் நடக்கிறது.இதற்கு 56 டன் சந்தன கட்டை தயார் நிலையில் உள்ளது. இந்த முறை 10ம் வகையான "ஜய்பொக்கல்' இனம் கட்டைகள் கூடுதலாக 26 டன் ஏலத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. கடந்த முறை கூடுதல் விலை கிடைத்த(கிலோ ஒன்று ரூ, 7100) முதல் வகையைச் சேர்ந்த "பிலாயாத் வுட்' இனக் கட்டைகள், இந்த முறை ஏலத்திற்கு இல்லை.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தேயிலை தூள் உற்பத்தியில் இந்தியா முதலிடம்



**குன்னூர்**: சர்வதேச தேயிலை மேலாண்மையியல் ஆலோசகர் சுந்தர் கூறியதாவது: இந்தியாவில் கடந்த 2011ம் ஆண்டு 111.6 கோடி கிலோ தேயிலை தூள் உற்பத்தி செய்யப்பட்டது. இது 2012ம் ஆண்டு 112.6 கிலோவாக உயர்ந்தது. இந்நிலையில் கடந்த 2013ம் ஆண்டு தேயிலை உற்பத்தி 120 கோடி கிலோவாக உயர்ந்து தேயிலை வரலாற்றில் புதிய சாதனை படைத்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். தென்னிந்தியாவை பொறுத்தவரை 2012ம் ஆண்டு 23.94 கோடி கிலோவாகவும், 2013ம் ஆண்டு 24.26 கோடி கிலோவாகவும் உற்பத்தியில் பங்கு வகித்துள்ளது. 2012ம் ஆண்டைக் காட்டிலும் வட இந்தியா வில் கடந்த 2013ம் ஆண்டு 7.5 கோடி கிலோ தேயிலை தூள் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2012ம் ஆண்டு 17.06 கோடி கிலோவாகவும், 2013ம் ஆண்டு 17.45 கோடி கிலோவும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**அரூர் கூட்டுறவு சங்கத்தில் ரூ2.7 கோடிக்கு பருத்தி ஏலம்**

**அரூர்**,: அரூர் கூட்டுறவு வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது.
அரூர், கடத்தூர், பொம்மிடி, கம்பைநல்லூர், கோட்டப்பட்டி உள்பட பல்வேறு பகுதிகளிலிருந்து விவசாயிகள் பருத்தியை இந்த கூட்டுறவு சங்கத்திற்கு விற்பனைக்கு எடுத்து வருகிறார்கள். இந்த வாரம் நடைபெற்ற பருத்தி ஏலத்தில் 653 விவசாயிகள் சுமார் 3270ற்கும் மேற்பட்ட பருத்தி மூட்டைகளை எடுத்து வந்தனர்.

இந்த வாரம் ஆர்சிஎச் ரக பருத்தி குவிண்டால் ரூ 4900 முதல் 5350 வரையிலும், வரலட்சுமி (டிசிஎச்) ரகம் ரூ6900 முதல் 7350 வரை ஏலம் போனது. சென்ற வாரத்தை விட குவிண்டாலுக்கு ரூ 300 விலை குறைந்துள்ளது. நேற்று, 3456 மூட்டை பருத்தி ஏலத்திற்கு வந்தது. கடந்த 3 வாரத்தில் நடைபெற்ற ஏலத்தில் சுமார் ரூ 2 கோடியே 70 லட்சத்திற்கு பருத்தி ஏலம் நடைபெற்றுள்ளது.

**அரியலூர் மாவட்டத்தில் பரவலாக மழை உழவுப் பணிகளில் விவசாயிகள் மும்முரம் அரசும் கை கொடுக்க கோரிக்கை**

**அரியலூர்**:அரியலூர் மாவட்டத்தில் தற்போது ஆங்காங்கே மழை பெய்து வருவதால் விவசாயிகள், விவசாய பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். எனினும் விவசாயிகள் பணிகளை செம்மையாக செய்யும் வகையில் அரசும் தேவையான உதவிகளை செய்து தர வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் கடந்தாண்டு பருவமழை பொய்த்ததால், ஏரிகள் நீர் வரத்தின்றி வறண்டது. இதனால் விவசாயம் பொய்த்துப் போனது. ஆனால் இந்தாண்டு ஒரளவு மழை பெய்ததா லும், ஏரிகளுக்கு ஓரளவு தண்ணீர் வந்துள்ளதாலும் மாவட்டம் முழு வதும் விவசாய பணிகள்

தீவிரமாக நடந்து வருகிறது. ஆனால் ஆங்காங்கே நடந்து வரும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் காரணமாக விவசாய பணிகளுக்கு ஆள் கிடைக்காத நிலை பல இடங்களில் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு, விவசாய பணிகளுக்காக வெளியூர்களில் இருந்து ஆட்கள் கொண்டு வர வேண்டியுள்ளதால், செலவுகளும் அதிகரித்துள்ளது.

இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தற்போது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழையை மட்டுமே நம்பி பருத்தி, மக்காசோளம் போன்ற மானாவாரி பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். கடந்த காலங் களை விட இந்தாண்டு உழவு கூலி, ஆள் கூலி, விதை, பயிர் ஆகியவற்றின் விலை உயர்வு விவசாயிகளை மேலும் கவலை கொள்ள வைத்துள்ளது.

மாவட்டத்தில் செந்துறை சுற்று வட்டார பகுதிகளான ராயம்புரம், பொய்யாதநல்லூர், பொட்ட வெளி, குழுமூர் பகுதிகளில் உழவு ஓட்ட டிராக்டருக்கு ஒரு மணி நேரத்திற்கு கடந்தாண்டு ரூ.700 ஆனது. தற்போது இது ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. ஏர் மாட்டுக்கு கடந்தாண்டு ரூ.1000மும், இந்தாண்டு ரூ.1300ம்

ஆகிறது. விதைப்பு கூலி கடந்தாண்டு ரூ.200ஆக இருந்தது. இந்தாண்டு ரூ.250 ஆகவும், விதை விலையும் அதிகரித்துள்ளது.

உரம், பூச்சி கொல்லி மருந்து, களையெடுப்பு என உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், விவசாயிகளுக்கு செலவு செய்யும் அளவுக்கு லாபம் கிடைக்குமா என்ற கவலையும் மேலோங்கி உள்ளது.

இருப்பினும் பாரம்பரிய தொழிலான விவசாயத்தை விவசாயிகள் கைவிட முடியாத நிலையில், அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து தர வேண்டும் என அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**இயற்கை விவசாய முறையில் மலைப்பிரதேச காய்கறி விளைவிப்பு சாக்கோட்டை விவசாயி சாதனை**

**காரைக்குடி**, : இயற்கை விவசாய முறையில் மலைப்பிரதேச காய்களான பீட்ரூட், கேரட் போன்றவற்றை விளைவித்து சாக்கோட்டை விவசாயி சாதனை படைத்துள்ளார்.

காரைக்குடி அருகே சாக்கோட்டை கருநாவல்குடி பகுதியை சேர்ந்தவர் மணி. இவர் தையல் கடை வைத்துள்ளார். தனது 4 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய முற்பட்டுள்ளார். இயற்கை விவசாயம் செய்து மலைப்பிரதேசங்களில் மட்டுமே விளையக்கூடிய பீட்ரூட், கேரட், பீன்ஸ் ஆகியவற்றை பயிர் செய்து அதில் அபார விளைச்சல் செய்து வெற்றி பெற்றுள்ளார்.

தவிர கரும்பு, புடலை, சுரைக்காய், பாகற்காய், செவ் வாழை ரகங்களும், கீரை வகைகள் மற்றும் மல்லிகை பூ உள்பட பல்வேறு ரகங்களையும் பயிர் செய்துள்ளார். இதற்கு உரமாக குப்பை, காய்கறி கழிவுகள், மாடு, ஆடு சிறுநீர் ஆகியவற்றி பயன்படுத்தி வரு கிறார். மண்ணின் வளத்தை பெருக்க மண்புழு உரம், பூச்சி தொல்லைகளில் இருந்து காப்பாற்ற மாட்டு சிறுநீர் உட்பட இயற்கையாக கிடைக்ககூடிய மூலிகை பொருட்களை கொண்டு  பூச்சிகளை கட்டுப்படுத்தி வருகிறார். ரசாயன உரங்களை பயன்படுத்தி விளைவிப்பதை விட இயற்கை முறையில் விளைவிப்பதில் அதிக மகசூல் செய்து வருகிறார்.

இது குறித்து விவசாயி மணி கூறுகையில்.

மண்புழு உரத்தை பயன்படுத்தி எனது நிலத்தை முற்றிலும் மாற்றியுள்ளேன். இயற்கை விவசாயத்தில் நல்ல மகசூல் கிடைக்கிறது. அரைகிலோ எடையுள்ள பீட்ரூட், ஒரே செடியில் கால்கிலோ அளவு உள்ள பீன்ஸ் என மலைபிரதேச காய்கள் கூட நல்ல விளைச் சல் தந்துள்ளது. தண்ணீரை மிச்சப்படுத்த சொட்டுநீர்

பாசனம் முறையை பின்பற்றி வருகிறேன். மல்பிங் சீட் முறையில் கத்திரி பயிரிட உள்ளேன். இம்முறையில் களை எடுக்க தேவையில்லை என்றார்.

### ரூ3.75 கோடிக்கு பருத்தி விற்பனை

**ஆத்தூர்**,: ஆத்தூரில் நடைபெற்ற ஏலத்தில் 15 ஆயிரம் பருத்தி மூட்டை ரூ3.75 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது.

சேலம் மாவட்டம் ஆத்தூர் புதுப்பேட்டை பகுதியில் வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தில் வாரம்தோறும் திங்கட்கிழமையில் பருத்தி ஏலம் நடைபெறுவது வழக்கம். இந்த ஏலத்தில் சேலம், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் தங்களது பருத்தியை விற்பனைக்காக கொண்டு வருவர்.

இந்த பருத்திகளை சேலம், திருப்பூர், கோவை, ஈரோடு, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள நூல்மில் அதிபர்கள் ஏலத்தில் நேரடியாக கலந்து கொண்டு வாங்கி செல்வது வழக்கம். நேற்று நடைபெற்ற ஏலத்தில் 1400 விவசாயிகளால் கொண்டு வரப்பட்ட 15 ஆயிரம் பருத்தி மூட்டைகள் ரூ3.75 கோடிக்கு விற்பனையானது.

ஆர்சிஎச் ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ3869 முதல் ரூ5389 வரையிலும், டிசிஎச் ரகம் ரூ6709 முதல் ரூ7756 வரையிலும் விற்பனையானது. கடந்த வாரத்தைவிட இந்த வாரம் ஆர்சிஎச் ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ300 வரையில் குறைவாக ஏலம் போனதால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

### கோடை பருவ பயிறு வகை சாகுபடி முனைப்பு இயக்கம்

**அன்னவாசல்**, : அன்னவாசல் வட்டாரத்தில் சித்தன்னவாசல் கிராமத்தில் வேளாண் துறை சார்பில் கோடை பருவ பயிறு வகை சாகுபடி முனைப்பு இயக்கம் நடைபெற்றது.

கூட்டத்தில் சித்தன்னவாசல் ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன் தலை மை வகித்தார். அன்னவா சல் வேளாண் உதவி இயக்குநர் சிங்காரம் பேசினார். சித்தன்னவாசல் கிராமம் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளில் விவசாயிகள் இருக்கும் தண்ணீரை பயன்படுத்தி கோடை கால பருவத்தில் நெல், சிறுதானியங்கள், பயிர் சாகுபடி செய்வதற்கு விவசாயிகளை ஊக்குவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் அலுவலர்கள் சுமித்ராதேவி, வேல்முருகன், வேளாண்மை உதவி அலுவலர் மணி வேல், அமலிஜாஸ் மின் ராஜ் குமார் தொழில் நுட்ப அலுவலர்களான ஆரோக்கியராஜ், சக்தி வேல் ஆகியோர் கூட்ட ஏற்பாடு செய்திருந்தார்கள்.

## 107 பேருக்கு இலவச ஆடு

**ஊத்துக்கோட்டை**, :பெரியபாளையம் ஊராட்சியில் 107 பேருக்கு இலவச ஆடு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. ஒன்றியக் குழு தலைவர் அம்மினி மகேந்திரன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் பாபு, ஒன்றிய கவுன்சிலர் சுரேஷ், ஊராட்சி தலைவர் ராஜா, துணைத்தலைவர் கேசவன், கூட்டுறவு சங்க தலைவர் சந்திரசேகர் முன்னிலை வகித்தனர். அமைச்சர் ரமணா, எம்எல்ஏக்கள் மணிமாறன், பொன்.ராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## உளுந்து, பாசிப்பயறு சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

**நாமக்கல்,** : கபிலர்மலை வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ வெளியிட்டுள்ள அறிக்கை:

கபிலர்மலை வட்டாரத்தில், கரும்பு மற்றும் மரவள்ளி நடவு பணி, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயிகள் ஊடுபயிராகவும், நெல் அறுவடை செய்தபின், தனிப்பயிராகவும், உளுந்து மற்றும் பாசிப்பயறு சாகுபடி செய்து, குறுகிய காலத்தில், கூடுதல் வருவாய் பெறலாம். இந்த ஆண்டு, மழை குறைவாக

பெய்துள்ளதாலும், நீர் நிலைகளில், தண்ணீர் குறைந்து வருவதாலும், நெல் அறுவடை செய்த வயல்களில், குறுகிய காலப்பயிராக உளுந்து மற்றும் பாசிப்பயறு சாகுபடி செய்து பயனடையலாம். தனிப்பயிராக சாகுபடி செய்ய, ஏக்கருக்கு 8 கிலோ விதையும், ஊடுபயிருக்கு, 4 கிலோ விதையும் போதுமானது. தற்போது, சாகுபடி செய்துவரும் மரவள்ளி மற்றும் கரும்பில் ஊடுபயிராக, உளுந்து அல்லது பாசிப்பயறு சாகுபடி செய்து, உபரி வருமானம் பெறலாம்.

ஒரு கிலோ விதைக்கு, 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் அல்லது 2 கிராம் கார்பென்டாசிம், இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இரண்டு சதவீதம் டி.ஏ.பி., கரைசலை, பூ பூக்க ஆரம்பிக்கும்போது, ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு சராசரியாக, 600 கிலோ தனிப்பயிரிலும், 250 கிலோ ஊடுபயிரிலும் மகசூல் கிடைக்கும். விவசாயிகளுக்கு தேவையான சான்று பெற்ற விதை உளுந்து, போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

### இலவச ஆடுகள் வழங்கும் விழா

**கோத்தகிரி**, :கெங்கரை ஊராட்சிக்குட்பட்ட கீழ் கோத்தகிரி கால்நடை மருத்துவமனையில் தமிழக அரசின் இலவச ஆடுகள் வழங்கும் விழா நடந்தது. நிகழ்ச்சியில் கோத்தகிரி ஊராட்சி ஒன்றிய தலைவர் மனோகரன் தலைமை வகித்தார். இதில் கீழ்கோத்தகிரி சுற்றுவட்டார பகுதியிலுள்ள 100 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு முதற்கட்டமாக 50 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வழங்கப்பட்டன. மேலும் ஆடுகளை பராமரிக்கவும், கொட்டகை அமைக்கவும் பயனாளிகளுக்கு ரூ.4,150 ரொக்கம் வழங்கப்பட்டது. இதில் கால்நடை மருத்துவர்கள் ரேவதி, செந்தில், வினோபானு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### பசுந்தேயிலை வார விலை நிர்ணயம்

**குன்னூர்,** : குன்னூரிலுள்ள தேயிலை ஏல மையத்தில் கிடைக்கும் விலைக்கு தகுந்தது போல் பசுந்தேயிலை விலை நிர்ணயம் செய்யப்பட்டு விவசாயிகளின்

பசுந்தேயிலைக்கு உரிய விலை வழங்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் தேயிலை வாரியத்தால் அறிவிக்கப்பட்டுள்ள விலை நிர்ணயத்தை விட வார விலை மட்டும் சற்று கூடுதலாக வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தற்போது தேயிலை வரத்து குறைந்து வரும் நிலையில் ஏல மையங்களில் தரமான தேயிலை தூளுக்கு அதிக விலை கிடைத்து வருகிறது.

இந்நிலையில் இந்த வாரம் பசுந்தேயிலைக்கு உண்டான விலையும் உயர்ந்துள்ளது. சாதாரண பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.15, நடுத்தரத்திற்கு ரூ.19, உயர் ரகத்திற்கு ரூ.43 வரை விலை வழங்கப்பட்டுள்ளது. வரும் வாரங்களில் தேயிலை தூள் விலை உயரும் பட்சத்தில் பசுந்தேயிலை விலையும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**உரக்கடைகளில் கண்காணிப்பு குழுவினர் ஆய்வு**

**ராமநாதபுரம்,**: ராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மை அலுவலர்கள் கொண்ட கண்காணிப்பு குழுவினர் ரசாயன உரங்கள் விற்பனையை ஆய்வு செய்து வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்த சாகுபடி பரப்பு 1.71 லட்சம் ஹெக்டேர். மாவட்டத்தில் ரசாயன உரங்களின் தேவையைக் கணக்கிட்டு தனியார் மற்றும் தொடக்கக் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டன. நடப்பு பருவத்தில் யூரியா 4714 மெ.டன், டி.ஏ.பி 982 மெ.டன், பொட்டாஷ் 428 மெ.டன், கூட்டு உரங்கள் 2,242 மெ.டன் விற்பனை செய்யப்பட்டுள்ளன. யூரியா 1,638 மெ.டன், டி.ஏ.பி 1,252 மெ.டன், பொட்டாஷ் 189 மெ.டன், கூட்டு உரங்கள் 1,283 மெ.டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. குறித்த காலத்தில் தேவையான அளவு உரங்கள் கிடைக்கும் வகையில் வேளாண் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். உரக் கடைகளில் அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொண்டு, விற்பனையில் முறைகேடுகள் இருந்தால் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். உர மாதிரிகள் ஆய்வுக்கும் அனுப்பப்படுகின்றன. உரக்கடைகளை ஆய்வு செய்திட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது.

குழுவில் வேளாண்மை இணை இயக்குநர், துணை இயக்குநர்(மத்திய அரசு திட்டம்), உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாடு) மற்றும் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள் இடம் பெற்றுள்ளனர். ஜன.30ல் பரமக்குடியில் உரக்கடைகளை வேளாண்மை இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மை துணை இயக்குநர் சுப்பிரமணியன், பரமக்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணையா, வேளாண்மை உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாடு) சேக் அப்துல்லா, வேளாண்மை அலுவலர் தரக்கட்டுப்பாடு நாகராஜன் ஆகியோர் கொண்ட குழுவினர் ஆய்வு செய்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

**திருவண்ணாமலை வட்டாரத்தில் நடைபெறும் வேளாண்மை திட்ட பணிகள் துணை இயக்குனர் ஆய்வு**

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை வட்டாரத்தில் செயல் படுத்தப்படும் வேளா ண்மை திட்டப் பணி களை வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) சு.கிருஷ் ணராஜ் ஆய்வு செய்தார்.

<u>வேளாண்மை திட்டப்பணிகள்</u>

திருவண்ணாமலை வட்டாரத்தில் வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் அறுவடை செய்த கரும்பு வயலில் உள்ள சோகையினை மக்க வைக்கும் நிலப் போர்வை முறை செயல் விளக்கத்தினை பள்ளி கொண்டாப்பட்டு கிராமத்தில் இளங்கோ என்ற விவசாயி வயலில் நடந்த செயல் விளக்கத்தினை வேளாண்மை திட்டப்பணிகள் வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய திட்டம்) சு.கிருஷ்ணராஜ் ஆய்வு செய்து அறிவுரை வழங்கினார்.

வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் கீழ்நாத்தூர் கிராமத்தில் தனபால் நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி முறை யில் சாகுபடி செய்யப்பட்டுள்ள ஏடிடி–37 பயிரினையும், உடையானந்தல் கிராமத்தில் கண்ணன் நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள ஏடிடிஆர்–45 பயிரினையும் , அதே விவசாயி நீடித்த நிலையான கரும்பு சாகுபடி முறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு பயிரினையும் பார்வையிட்டு அறிவுரை வழங்கினார்.

<u>நெல் சாகுபடி</u>

தென்மாத்தூர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்யப் பட்டுள்ள ஏடிடி–37 விதை பண்ணை பயிரினையும் பார்வையிட்டு அறிவுரை வழங்கினர். ஆய்வின் போது ரா.பெரியசாமி வேளாண்மை உதவி இயக்குனர் திருவண்ணாமலை முத்துராம், வேளாண்மை அலுவலர் (மத்திய திட்டம்) சிவலிங்கம் விரிவாக்க உதவியாளர் உடன் இருந்தனர். ஆய்விற் கான ஏற்பாடு களை விசுவநாதன், உதவி வேளாண்மை அலுவலர், திருவண்ணா மலை செய்திருந்தார்.

**குண்டேரிப்பள்ளம் அணை பாசன பகுதியில் வெங்காயம் அறுவடை பணி தீவிரம் விலை குறைந்ததால் விவசாயிகள் கவலை**



**கோபிசெட்டிபாளையம்,**

குண்டேரிப்பள்ளம் அணை பாசன பகுதியில் வெங்காயம் அறுவடை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. வெங்காயத்தின் விலை குறைவால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

<u>குண்டேரிப்பள்ளம் அணை</u>

கோபிசெட்டிபாளையம் அருகில் உள்ள குண்டேரிப்பள்ளம் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் மூலம் வினோபாநகர், கொங்கர்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சுமார் 2 ஆயிரத்து 500 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

குண்டேரிப்பள்ளம் அணையின் பாசன பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் வெங்காயத்தை சாகுபடி செய்து உள்ளனர். ஒருசில விவசாயிகள் வாழைக்கு ஊடுபயிராக வெங்காயத்தை பயிரிட்டு உள்ளனர். கல்கோனி, ரகம்–2, ஹைபிரட் ஆகிய ரக வெங்காயம் பயிரிடப்பட்டு உள்ளது.

<u>அறுவடை பணி தீவிரம்</u>

வினோபாநகர், கொங்கர்பாளையம் பகுதிகளில் தற்போது வெங்காயம் நன்கு வளர்ச்சி அடைந்து உள்ளது. அதைத்தொடர்ந்து, விவசாயிகள் வெங்காயம் அறுவடை பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். இந்த வெங்காயத்தை கோபிசெட்டிபாளையம், ஈரோடு, திருப்பூர் ஆகிய பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் வியாபாரிகள் நேரடியாக வந்து வெங்காயத்தை கொள்முதல் செய்கின்றனர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு வெங்காயத்தின் விலை ஒரு கிலோவுக்கு ரூ.80–க்கு மேல் உயர்ந்தது. இதனால் அதிகமான நிலப்பரப்பில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால் தற்போது வெங்காயத்தின் விலையில் சரிவு ஏற்பட்டு உள்ளது. ஒரு கிலோ சின்னவெங்காயம் ரூ.10–க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். விலை குறைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

**வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் சர்க்கரை ஆலை நிர்வாக குழு தீர்மானம்**



சர்க்கரை ஆலையின் நிர்வாகக்குழு கூட்டம் தலைவர் காங்கயம்பாளையம் சின்னப்பன் என்கிற எஸ்.பழனிச்சாமி தலைமையில் நடந்த போது எடுத்த படம்.

**உடுமலை,**

எரிசாராய ஆலையின் கழிவுநீரை வயல்களுக்கு ஒருமுறை பாசனத்திற்கு பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வது என்று அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் நிர்வாகக்குழு தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

நிர்வாகக்குழு கூட்டம்

உடுமலையை அடுத்த கிருஷ்ணாபுரத்தில் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. இந்த ஆலைக்கு உடுமலை, தாராபுரம், பல்லடம், பழனி ஆகிய தாலுகாவில் உள்ள கரும்பு விவசாயிகளிடம் இருந்து கரும்பு கொள்முதல் செய்யப்படுகிறது. சர்க்கரை ஆலையின் கழிவுப்பாகு (மொலாசஸ்), அதன் சார்பு நிறுவனமான வடிப்பாலைக்கு (எரிசாராய ஆலை) பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில், கிருஷ்ணாபுரத்தில் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் நிர்வாகக்குழு கூட்டம் கூட்ட அரங்கில் நடந்தது. இதற்கு நிர்வாக குழு தலைவர் காங்கயம்பாளையம் சின்னப்பன் என்கிற எஸ்.பழனிச்சாமி தலைமை தாங்கினார். மேலாண்மை இயக்குனர் ஆர்.ஆனந்தி முன்னிலை வகித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்

கூட்டத்தில், சர்க்கரைஆலையின் சார்பு நிறுவனமான எரிசாராய ஆலையின் (வடிப்பாலை) கழிவு நீரை விவசாயிகளின் வயல்களுக்கு ஒருமுறை பாசனத்திற்கு பயன்படுத்த கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்வது.

தமிழக தொழில்துறை அமைச்சரின் உத்தரவுப்படி சர்க்கரை ஆலையில் 5 முக்கிய இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்துவது.

எரிசாராய ஆலையின் தேவைக்கு ஏற்ப மற்ற சர்க்கரை ஆலைகளில் இருந்து கழிவுப்பாகு (மொலாசஸ்) கொள்முதல் செய்வது.

திரும்ப அழைப்பது

2013-2014-ம் ஆண்டு கரும்பு அரவைக்காக சர்க்கரை ஆலை இயங்கவும், பராமரிப்பு பணிக்காகவும், தொழிலாளர்களை திரும்ப அழைப்பது என்பது உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், நிர்வாகக்குழு துணைத்தலைவர் என்.முத்துராமலிங்கம், உறுப்பினர்கள் எஸ்.ஆர்.வேலுச்சாமி, டபிள்யூ.என்.கே.ஈஸ்வரன், எஸ்.ராஜ்குமார், ஆர்.சித்ராதேவி, பி.குப்புசாமி, எஸ்.டி.முத்துசாமி, கே.கண்ணம்மாள், சர்க்கரை ஆலை அலுவலக மேலாளர் எஸ்.நவநீதன், கரும்பு பெருக்கு அலுவலர் ஏ.ரவிச்சந்திரன், அலுவலக கண்காணிப்பாளர் பரூக் உள்பட பலர் பேசினர்.

**பாகநத்தம் ஊராட்சியில் கோடைகால பயிர்கள் சாகுபடி முகாம்**

**கரூர்,**

தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்த திட்டத்தின்கீழ் உணவு தானிய உற்பத்தி இயக்கம் தொடர்பாக கோடைகால பயிர்கள் சாகுபடி முகாம் பாகநத்தம் வருவாய் கிராமத்தில் வெடிக்காரன்பட்டியில் நடைபெற்றது. இந்த முகாமை தாந் தோணி வட்டார துணை வேளாண்மை அலுவலர் ஷோபா தலைமை ஏற்று நடத்தினார்.

முகாமில் கோடை காலத்தில் சோளம், கம்பு, மக்காச் சோளம் ஆகிய பயிர்களை சாகுபடி செய்வது மற்றும் அதிக மகசூல் பெற கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்து கூறப்பட்டது.

மேலும் பயறு வகை பயிர்களான உளுந்து, பச்சைப் பயறு சாகுபடி செய்து அதிக மகசூல் பெறுவது பற்றியும், நிலக்கடலையில் ஊடு பயிர்களாக துவரை, உளுந்து, பச்சைப்பயறு ஆகியவற்றை பயிர் செய்து அதிக லாபம் பெறவும் எடுத்துக் கூறப் பட்டது.

விவசாயிகளுக்கு தேவை யான இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களை அருகில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றும் கூறப் பட்டது. முகாமில் அதிகப் படியான விவசாயிகள் கலந்து கொண்டு பல்வேறு சந்தேகங் களுக்கு விளக்கம் பெற்றனர்.

மேலும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப் பில் உள்ள இடுபொருட்கள் விவரம் பற்றி தெரிவிக்கப் பட்டது.

**புல்லூர் பிர்கா விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை வழங்கப்படும் அமைச்சர் சுந்தர்ராஜன் தகவல்**



**தொண்டி,**

புல்லூர் பிர்கா விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை வழங்கப்படும் என்று அமைச்சர் சுந்தர் ராஜன் வழங்கினார்.

**விலையில்லா பொருட்கள்**

திருவாடானை யூனியனில் தமிழக அரசின் விலையில்லா கிரைண்டர், மிக்சி, மின் விசிறி வழங்கும் விழா ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திருமால்சாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கவுன்சிலர் ஆனிமுத்து, யூனி யன் தலைவர் முனியம்மாள் ராஜேந்திரன், கூட்டுறவு ஒன் றிய துணை தலைவர் மதிவா ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை ஆட்சியர் ராஜேசுவரன் வரவேற்று பேசினார்.

விழாவில் அமைச்சர் சுந்தர் ராஜன் கலந்து கொண்டு திரு வாடானை யூனியனுக்கு உட் பட்ட டி.நாகணி ஊராட்சி யில் 1,088 பேருக்கும், கலிய நகரி ஊராட்சியில் 768

பேருக்கும், வெள்ளையபுரம் ஊராட்சியில் 778 பேருக்கும் என 2,634 பயனாளிகளுக்கு விலையில்லா பொருட்களை வழங்கினார். விழாவில் அவர் பேசியதாவது:- தமிழக அர சின் சார்பில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் திரு வா டானை சட்டமன்ற தொகு தியில் 51,362 பேருக்கு விலை யில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறிகள் வழங்கப்பட் டுள்ளது.

**குடிநீர் பிரச்சினை**

ராமநாதபுரம் மாவட்டத் தில் குடிநீர் பிரச்சி னையை தீர்க்க மாவட்ட நிர்வாகத் துக்கு முதல்-அமைச்சர் ஜெயலலிதா ஆலோசனை வழங்கியுள்ளார். ராமநாதபு ரம் மாவட்டத்தில் உள்ள கண்மாய், ஊரணிகளை இந்த ஆண்டு ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. தமிழகத்தில் உள்ள 1.86 கோடி குடும்ப அட்டைதா ரர்களுக்கு ரூ.4,900 கோடி மானியமாக வழங்கி 20 கிலோ அரிசியை விலையில்லாமல் வழங்கி வருகிறார். இந்தியாவி லேயே உணவு பாதுகாப்பு திட்டத்தை தமிழக முதல்வர் தான் முதன் முதலாக செயல் படுத்தி உள்ளார்.

மத்திய அரசு மாற்றான் தாய் மனப்பான்மையிலும் தமிழ்நாட்டு மக்களின் தேவை யறிந்து திட்டங்களை அறி வித்து செயல்படுத்தி வருகி றார். இந்த ஆண்டு ரூ.150 கோடியில் ராமேசுவரத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக் கப்பட உள்ளது. இதேபோல கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரம் உயர கறவை மாடுகள், விலையில்லா வெள் ளாடுகள் வழங்கப்பட்டு வரு கிறது. திருவாடானை-ஓரி யூர் சாலை அகலப்படுத்தும் பணி ரூ.24 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகி றது.

**பயிர் காப்பீடு**

கடந்த ஆண்டு ராமநாத புரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரணமாக ரூ.133 கோடியை வழங்கிய தமிழக அரசு பயிர் காப்பீட்டு தொகை யாக ரூ.116 கோடியை வழங்கி யுள்ளது. திருவாடானை தாலுகாவில் பயிர் காப்பீடு தொகை வழங்குவதில் புல் லூர் தாலு£க விடுபட்டுள்ளது. இதுதொடர்பாக விவசாயிக ளின்

கோரிக்கையை வரு வாய்த்துறை அமைச்சர் மற் றும் வருவாய்த்துறை செயலர் மூலமாக தமிழக அரசின் கவ னத்திற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது. எனவே விரை வில் புல்லூர் பிர்கா விவசா யிகளுக்கு பயிர் காப்பீடு தொகை வழங்கப்படும்.

இலங்கை தமிழர்களின் நல னில் அக்கறை காட்டாத மத் திய அரசு ராமேசுவரம் மீன வர்கள் கடலில் மீன் பிடிக்க சென்றால் இலங்கை கடற்ப டையால் துப்பாக்கி சூட் டுக்கு ஆளாக்கப்படுகின் றனர். ஆனால் பலமுறை முதல்- அமைச்சர் ஜெயலலிதா மத் திய அரசை வலியுறுத்தியும் அதனை தடுக்க எவ்வித நட வடிக்கையும் எடுக்கவில்லை. தமிழக அரசு மக்களுக்கு வழங்கி வரும் சிறப்பு திட்டங் களை இந்தியா முழுவதும் செயல்படுத்த தமிழக மக்கள் என்றென்றும் முதல்- அமைச் சர் ஜெயலலிதாவுக்கு ஆதர வாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். விழாவில் தாசில்தார் காமாட்சி, மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ஜெயஜோதி, மாவட்ட கவுன்சிலர் ஆனந்த வள்ளி, கூட்டுறவு அச்சக துணை தலைவர் கந்தவேலன், ஊராட்சி தலைவர்கள் பாகம்பிரியாள், மாதவன், ஜரினாபேகம், ஒன்றிய கவுன் சிலர்கள் அஷ்ரப் நிஷா, மோகன், ஒன்றிய ஜெயலலிதா பேரவை செயலாளர் செங் கைராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர். துணை தாசில்தார் சந்திரன் நன்றி கூறினார்.